# நூல்தேட்டம்

## காலாண்டிதழ்

★ ஈழத்துத் தமிழ் நூல்கள்

— ஒரு வழிகாட்டி

★ ஈழத்து நூல் வெளியீடுகளும்
அவற்றிற்கான சர்வதேச தராதர
நூல் எண் வழங்கலும்

— என். செல்வராஜா

★ செய்திக்கோவை

மலர் 1 இதழ் 1 சித்திரை 199[illegible]

மலர் 1 இதழ் 1 சித்திரை 1990

# நுழைவாயில்

எமது தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள நூலகங்களின் தரத்தை உயர்த்தவும், அங்கு நூலகவியல் அறிவைப் பரந்த அளவில் வளர்த்தெடுக்கவும் தேவையான செய்தியைத் தமிழ் பேசும் மக்களிடையே கொண்டு செல்லும் பணியை மேற்கொள்ளும் பொருட்டு அயோத்தி நூலக சேவைகள் நிறுவனம் 1985ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ' நூலகவியல்'' என்ற காலாண்டுச் சஞ்சிகையை ஆரம்பித்தது.

''நூலகவியல்'' தன் நோக்கத்தை அடையும் நெடும்பயணத்தில் ஐந்தாவது ஆண்டைக் கடந்து வரும் இவ்வேளையில் நூலகத்துறையுடன் தொடர்புபட்டதும் பிரிக்கமுடியாததுமான வெளியீட்டுத்துறையிலும் தன் பங்களிப்பை நல்க இன்று புதிதாய்ப் பிறப்புள்ளது ''நூல்தேட்டம்'' என்னும் சகோதர காலாண்டுச் சஞ்சிகை.

தமிழ்ப் பிரதேசங்களில் ஓரிடத்தில் வெளியிடப்படும் நூல்கள் / சஞ்சிகைகள் பற்றிய தகவல்களை மற்றோரிடத்திலுள்ள பெரும்பாலானவர்கள் அறிந்து கொள்ள முடியாதவர்களாக இன்றுள்ளனர். ஒரு ஆசிரியர் தன் நூலைத் தமிழ்ப் பிரதேசம் எங்கும் பரவலாக விநியோகித்துக் கொள்ள மார்க்கமின்றி இருக்கும் நிலையும் இன்றுள்ளது. இவை போன்ற காரணங்களினால் ஒரு நூலின் விற்பனை வீதம் குறைவாகக் காணப்படுகின்றது நூலின் விற்பனைக் குறைவுக்குக் காரணம் ஈழத்தமிழ் மக்கள் உள்ளூர் வெளியீடுகளை விரும்பி வாங்காமையே என்பது சிலரின் வாதம். விரும்பி வாங்கத் தயாராக இருக்கும் எத்தனை பேருக்கு ஒரு நூலின் வெளியீடு பற்றிய செய்தி சென்றடைகின்றது என்பதை இந்தச் சிலர் சிந்திக்க வேண்டும்.

ஈழத்து நூல், சஞ்சிகை வெளியீடுகளினது செய்திகளைத் தாங்கி வரத் தயாராகியிருக்கும் ''நூல்தேட்டம்'', ஒரு நூலின் பிறப்பு, இருப்பு பற்றிய தகவல்களைப் பலரும் அறிந்து கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் என்று நம்பலாம். இந்தச் சஞ்சிகையின் மூலம் நாம் இரு முக்கிய கடமைகளை ஆற்ற விரும்புகிறோம். முதலாவது ஈழத் தமிழ் வெளியீடுகள் பற்றிய பதிவுகளை மேற்கொள்ளல்; இரண்டாவது, நூல் வெளியீட்டாளரையும், வாசகரையும் இணைக்கும் பாலமாகச் செயற்படுதல்.

இக் காலாண்டு இதழ் தற்போது 1980ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட வெளியீடுகளை மட்டுமே தாங்கிவருமாயினும் காலக்கிரமத்தில் படிப்படியாக 1980ஆம் ஆண்டுக்கு முந்திய நூல்களின் விபரப் பதிவுகளையும் சேர்த்துக் கொள்ளவிருக்கின்றோம். இவ்வகையில் இச் சஞ்சிகையின் தொகுதி எதிர் காலத்தில் ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான உசாத்துணைச் சாதனமாக அமையும் என்று நம்புகின்றோம்.

இந் நூல் விபரப்பட்டியல் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது முதலாவது பிரிவு, பாடவாரியாக (Subject) ஒழுங்குபடுத்தப் பட்ட பிரதான பதிவாகும் இலங்கை நூலகங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் தூவி தசாம்சப் பகுப்பு முறையின் அடிப்படையில் இவ்வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப்பின் கீழும் தொடர் இலக்க ஒழுங்கில் பதியப்பட்டுள்ளன இரண்டாவது பிரிவில் ஆசிரியர் அட்டவணை, அகர வரிசை ஒழுங்கில் தரப்பட்டு அவர்களுக்குரிய நூலின் தொடர் இலக்கம் அருகில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறே மூன்றும் பிரிவில் நூலின் தலைப்பிற்கான அட்டவணை அகரவரிசை ஒழுங்கில் தரப்பட்டுள்ளது.

இந்தச் சஞ்சிகை நூல்பட்டியல் தகவல்களைத் தருவதுடன் மட்டும் நில்லாது வெளியீட்டாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் உதவக்கூடிய சிறப்புக் கட்டுரைகளையும் தொடர்ந்து தாங்கிவரவுள்ளது. கடந்த காலத்தில் வெளியிடப்பட்ட நூல்கள் சம்பந்தமான ஆய்வுக்கண்ணோட்டங்களும் இப்பகுதியில் இடம் பெறவுள்ளன. இவ்விதழில் காணப்படும் சர்வதேச தராதர நூல் எண் (ISBN) பற்றிய தகவல்கள் வெளியீட்டாளர்களுக்குப் பயன் தரக்கூடியதாகும்.

நூற்பட்டியல், சிறப்புக்கட்டுரைகள் இடம்பெறும் இச்சஞ்சிகையில் சமகாலப்பகுதியில் தமிழ்ப்பிரதேசங்களில் இடம்பெற்ற நூல்வெளியீட்டு முயற்சிகள். வெளியீட்டு விழாக்கள். எழுத்தாளர் பற்றிய செய்திகள். போன்ற பதிவுக்குரிய தகவல்கள் செய்திக்கோவை என்ற பகுதியில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

இச் சஞ்சிகையினை நூலகங்களும், வெளியீட்டாளர்களும் மாத்திரமன்றி நூல் வாசிப்பில் ஆர்வமுள்ள ஆர்வலர்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்று நம்புகின்றோம்.

இச் சஞ்சிகையினை வெளியிட வேண்டும் என்ற என் ஆர்வத்திற்கு உரமூட்டிய நண்பர்கள் பலர் அவர்களில் திரு அந்தனி ஜீவா குறிப்பிடத்தக்கவர் அவருக்கும் நேரடியாகவும். மறைமுகமாகவும் உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்,

திருநெல்வேலி, என். செல்வராஜா,
.. 04. 1990. ஆசிரியர்.

# நூற்பட்டியலில் தரப்பட்டுள்ள தகவல்கள் பற்றிய சில குறிப்புகள்

இந்நூற்பட்டியலில் உள்ள நூல்கள் யாவும் பாட ஒழுங்கில் வகைப் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடங்களின் கீழும் தலைப்புகள் அகர வரிசைப்படுத்தப்பட்டு தொடர் இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் காணப்படும் நூல் பற்றிய தகவல்கள் மூன்று பகுதிகளாக உள்ளன. முதலாவது பகுதி ஆசிரியர் வெளியீட்டாளர் பற்றிய தகவல்களையும் இரண்டாம் பகுதி நூலின் பௌதிக அமைப்பு விபரங்களையும் மூன்றும் பகுதி நூலின் உள்ளடக்கம் பற்றிய சுருக்கக் குறிப்பினையும் தருகின்றன.

முதலாம் பகுதியில் முதலில் நூலின் பெயரும் அதையடுத்து நூலாசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாளர் மொழி பெயர்ப்பாளர் போன்ற நூலின் ஆக்கத்துக்குப் பொறுப்பானவர் பற்றிய தகவலும் தரப்பட்டுள்ளன. அதனை அடுத்து வெளியிட்ட இடமும் வெளியீட்டாளர் முகவரியும் தரப்பட்டுள்ளன. ஆசிரியரே வெளியீட்டாளராகக் காணப்படுமிடத்து வெளியிட்ட இடமும், இயலுமாயின் முகவரியும் தரப்படும் தொடர்ந்து, குறித்த நூல் எத்தனையாவது பதிப்பாக வெளிவந்ததென்றும், எந்த ஆண்டில் அப்பதிப்பு வெளியிடப்பட்டது என்றும் தரப்பட்டிருக்கின்றன இதையடுத்து அடைப்புக் குறிக்குள் அச்சகத்தின் விபரம் காணப்படுகின்றது.

இரண்டாவது பகுதியில்உள்ள தகவல்களில் முதன்மையானது பக்கங்களாகும். பக்கங்கள் மூவகைப்படும் ரோமன் இலக்கத்தில் காணப்படும் பக்கங்களின் எண்ணிக்கை அதே இலக்கத்தில் தரப்பட்டுள்ளது. உதாரணம் (IV) பக்கங்கள் எண்ணிடப்படாதவிடத்து அவை எண்ணப்பட்டு அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன அதையடுத்து அரபு இலக்கங்கள் தரப்பட்டுள்ளன. பக்கங்களை அடுத்து அந்த நூலில் விளக்கப்படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள் தகடுகள் வண்ணப்படங்கள் என்பன காணப்படுகின்றன. என்ற தகவலும் அதையடுத்து நூல் எவ்வாறு மட்டை கட்டப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பி இழை (Stapled) நூல்இழை குத்திக்கட்டல், நூல்இழை கோர்த்துக்கட்டல் ஆகிய மூன்று வகையாக ஈழத்து நூல்கள் மட்டை கட்டப்படுவதுண்டு. இத்தகவலை அடுத்து நூலின் விலை விபரம் தரப்பட்டுள்ளது. இலங்கை வெளியீடுகளுக்கு ரூபா சதத்திலும், இந்தியா மற்றும் பிறநாட்டு வெளியீடுகளுக்கு அந்த நாட்டு நாணயத்தின் பெறுமதியிலும் விலை குறிக்கப்பட்டுள்ளது. விலை அச்சிட்டுக் குறிக்கப்படாமல் ரபர் ஸ்டாம்ப் மூலம் அல்லது பென்சில் மூலம், நூலில் குறிக்கப்பட்டிருப்பின் அவ்விலை அடை[illegible]

தெரிவிக்கப்படும். விலையே குறிக்கப்படாத நூல்களுக்கு அது பற்றிய தகவல் தரப்பட்டிருக்கும்.

வர்த்தகக் கழிவு, நூலகக்கழிவு வழங்கப்படுவது உறுதியாகத்தெரிந்தாலன்றி அது பற்றிய தகவல் இங்கு தரப்படாது. இரண்டாம் பகுதியில் இறுதி அம்சம் நூலின் நீள அகலமாகும். இவை சதம மீற்றரில் அளந்து குறிக்கப்படும்.

மூன்றாவது பகுதியில் நூல் பற்றிய சுருக்கமான குறிப்பு வாசகரின் தெரிவுத் தேவை கருதித் தரப்பட்டுள்ளது.

## 1.0. பொது விடயங்கள்

### 1.1. நூலகவியல்

1. **கல்வி நிறுவன நூலகங்கள்** / விமலாம்பிகை பாலசுந்தரம் ஆனைக் கோட்டை: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: ஆர். எஸ் அச்சகம்)

   பக்கம்: viii, 78; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்;
   விலை: 20/-, நூலகக் கழிவு 10%; அளவு; 20 × 14சமீ

ஆரம்பப் பாடசாலைகள், கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகள், சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்களான தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் ஆகியவற்றில் இயங்கும் நூலகங்களின் நூற்சேகரிப்பு, நூலகங்களின் பயன்பாடு, நூலகசேவைப் பகுதிகள் முதலியன விவரிக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகள் அவற்றை நிவர்த்தி செய்ய நூலகர் கையாளக்கூடிய வழிமுறைகள் என்பனவும் ஆராயப்பட்டுள்ளன.

2. **கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும்** / என். செல்வராஜா ஆனைக் கோட்டை: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, 1989 (யாழ்ப்பாணம்: நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ்)

   பக்கம்: (10), 86; மட்டை: நூல்இழை – குத்திக் கட்டல்:
   விலை: 30/-, நூலகக் கழிவு: 10%; அளவு: 18.5 × 12.5 சமீ.

தமிழ்ப் பிரதேசங்களை மையப்படுத்தி கிராம நூலக இயக்கம், சிறுவர் நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பாலர்களுக்கான நூல்களைக் ... வில் வெளியிடுதல், சனசமூக நிலைய நூலகங்களின் நூலக

நடவடிக்கைகள், நூல் கொள்வனவு போன்ற விடயங்களில் கட்டுரைகளைக் கொண்டது.

3. தூயியின் தசாம்சவகுப்பு: 18ம் பதிப்பு, 3ம் சாராம்சம்/ வே. இ. பாக்கியநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 7: இலங்கை தேசிய நூலகசேவைகள் சபை, 1வது பதிப்பு 1989 (கொழும்பு: ஸ்டார் லைன் அச்சகம்)

பக்கம்: (8), 54; மட்டை: ஸ்டேப்ளர்; அளவு: 25 X 18 சமீ; விலை: குறிப்பிடப்படவில்லை.

நூற்பகுப்பாக்கத்தில் இன்று மிகவும் பிரபல்யமாக விளங்கும் தூயி தசாம்ச வகுப்பாக்கமே (Dewey Decimal Classification) பெரும்பான்மையான நாடுகளில் ஆவணங்களை ஒரு சீராக ஒழுங்கு செய்வதற்கு ஏற்புடையதெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனது 18ஆவது பதிப்பின் மூன்றுவது நிரைகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் இணைத்துத் தரப்பட்டுள்ளன. சிறு நூலகங்களில் வகுப்பாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு ஏற்றது.

## 2. 0. தத்துவம்

### 2. 1. இந்து தத்துவம்

4. சுவாமி ராமதாஸ் அருளுரைகள், பாகம் 1/ ம. சி சிதம்பரப்பிள்ளை (தமிழாக்கம்). தெல்லிப்பழை; ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் 1வது பதிப்பு, 1989. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்)

பக்கம்: XXXIV, 138; மட்டை: நூல்இழை - குத்திக்கட்டல்; விலை: 30/-; அளவு: 18 X 12சமீ.

இந்தியாவிலுள்ள கஞ்சன்காடு ஆனந்தாச்சிரமத்தின் ஸ்தாபகர் சுவாமி இராமதாஸர் அவர்களது அருளுரைகளின் தமிழ்மொழிபெயர்ப்பு. பம்பாயிலிருந்து வெளிவரும் ''பவான்ஸ் ஜேர்னல்'' ஆங்கில சஞ்சிகையில் வெளிவந்த இக் கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டு ''ஆத்மஜோதி'' சஞ்சிகையில் 1976 - யூலை 83 வரை வெளிவந்தன. அவற்றின் நூல் உருவே இதுவாகும்.

## 3. 0. சமயம்

### 3. 1. இந்துசமயம்

5. செவ்வேள்/ ஆ. கந்தையா. கொழும்பு 7: இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை, 1வது பதிப்பு 1985. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

பக்கம்: XII, 156; விளக்கப் படம்: 10, மட்டை: கம்பி இழை; விலை: குறிப்பிடப்படவில்லை; அளவு: 20 × 14 சமீ.

சைவபக்தி இலக்கியம் தொடர்பான நான்கு ஆராய்ச்சிக்கட்டுரைகள் அடங்கியது. பரிபாடலிலுள்ள செவ்வேள் மேற்பாடப்பட்ட எட்டுப் பாடல்களையும் விளக்கும் கட்டுரைகள் அவை.

6. திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள் / இ. வடிவேல். கொழும்பு: பிரதேச அபிவிருத்தி, இந்துசமய இந்து கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, 1982 (கொழும்பு: அரசன் அச்சகம்).
பக்கம்: (14), 328; வரைபடம், புகைப்படங்கள்;
மட்டை: கம்பி இழை: விலை: (25/–); அளவு: 22 × 14 சமீ.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள 65 கோவில்கள் பற்றிய குறிப்புக்கள் அடங்கியுள்ளன. யாத்திரிகர்களுக்கு ஏற்ற தகவல்கள் உள்ளன. கோவில்கள் யாவும் 14 தலைப்புக்களின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 9 கோவில்கள் தனித்தனி அத்தியாயங்களாகவும் (உதாரணம்: கோணேஸ்வரம்) மிகுதி 5 பிரதான தெய்வங்களின் பெயரின் கீழும் (உதாரணம்: சிவன் கோவில்) வகைப்படுத்தப்பட்டுள்ளன.

7. திருமுறைப் பெருமை / ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர், பதிப்பு — க. வைத்தீஸ்வரக் குருக்கள். காரைநகர் (யாழ்ப்பாணம்): காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகம், 1வது பதிப்பு. 1987. (யாழ்ப்பாணம்: கு. வி. அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி).
பக்கம்: XII, 68; மட்டை: கம்பி இழை; விலை; 20/–;
அளவு 18 × 12 ச மீ.

சைவத் திருமுறைகளின் பெருமையினை விளக்கும் நூல் யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் 1911இல் தாம் வெளியிட்ட அடங்கன் முறையில் எழுதிய திருமுறைப். பெருமை என்ற கட்டுரையும் திரு. க. சி. குலரத்தினம் அவர்கள் எழுதிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் பற்றிய வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையும் உள்ளன.

8. பராசக்தி பாமாலை / மு. கணபதிபிள்ளை, கோட்டைக் கல்லாறு; சதுராலயம், 1வதுபதிப்பு. 1989. (மட்டக்களப்பு; புனித செபஸ்தியார் அச்சகம்)
பக்கம் ; VIII, 42; மட்டை: கம்பி இழை; விலை ; 20/–;
அளவு ; 21 × 14 ச மீ,

சக்தி வழிபாட்டுக்குரிய பாடல்களின் தொகுப்பு. கல்லாற்றுக் கண்ணகை அம்மன் காவியம், கடல் நாச்சி அம்மன் காவியம், கண்ணகை அம்மன் காவடி விருத்தம், பேச்சி அம்மன் காவியம். பராசக்தி இசைப் பாடல்கள் ஆகிய தலைப்புக்களில் பாடல்களும் ஓலைச்சுவடிகளில் இருந்து

பிரதி செய்யப்பட்ட கண்ணகை அம்மன் குளிர்த்தி, மாரி அம்மன் குளிர்த்தி, கண்ணகை கலியாணக் கால் சுற்றுக்காவியம் ஆகியனவும் சேர்க்கப்பட்டுள்ளன .

9. ஞானச்சுடர் ஆ.கந்தையா. கொழும்பு 6 : (ஆசிரியர்), நடராலயம், 4 40ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 1987. (கொழும்பு 14, ஸ்டார் லைன் பிரிண்டர்ஸ்).

பக்கம்; (6). 78; மட்டை: நூல்இழை கோர்த்துக்கட்டல்; விலை; 25/-; அளவு: 18 X 13 சமீ.

பத்து சமயக் கட்டுரைகளின் தொகுப்பு ஏழு ஆராய்ச்சிக் கட்டுரைகள், இரு விளக்கக் கட்டுரைகள் ஒரு உண்மைச் சம்பவம் ஆகியன இத் தொகுப்பில் அடங்குகின்றன. தேவாரம் பெரியபுராணம் திருவிளையாடற் புராணம், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றில் உள்ள சில அம்சங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளாக உருப்பெற்றுள்ளன.

## 3. 2. இஸ்லாம்

10. உத்தமத்தூதர் / எஸ் எம். ஹனிபா கொழும்பு 10; இஸ்லமிக் புக் டிரஸ்ட், 323 ஜும் ஆ மஸ்ஜித் வீதி. 4வது பதிப்பு, 1984 (1வது 1976). (கொழும்பு 2; அல் – ஜசீரா லிமிட்டெட், 90, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை).

பக்கம்; 44; மட்டை; கம்பி இழை: விலை; 5/-; அளவு; 18 X 12 சமீ.

நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல். சிங்களத்தில் 1980 ஆம் ஆண்டு இது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது சிறுவர்களுக்கு ஏற்றது.

11. நபி பெருமானின் நல்லுரைகள் M Y.M மீ ஆத், கண்டி; தமிழ் மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, 1989. (கொழும்பு 12; குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

பக்கம்; 56, மட்டை; கம்பிஇழை; விலை; 12/-; அளவு; 18 X 12 சமீ.

நபி பெருமானின் நல்லுரைகளை விளக்கும் 40கவிதைகளைக் கொண்ட தொகுதி, நபி பெருமானின் வாழ்வும் வாக்கும் திரண்டுருவானது ஹதீஸ் பல துறைகளையும் பற்றி அண்ணல் நபி பெருமான் நவின்ற 40பொன் மொழிகள் பல்வேறு உறதீஸ் கிரந்தங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு கவிதை உருவில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு கவிதையின் முன்னும் ஹதீஸின் அரபுமூலம் தரப்பட்டுள்ளது.

## 4. 0. சமூகவியல்

### 4. 1. பெண்நிலை

12. **இன்னுமொரு ஜாதி; இலங்கைத் தமிழ்ப் பெண்கள்** / எல்செ ஸ்யோன்ஸ் பெர்க்(மூலம்) தமிழாக்கம் – பார்வதி கந்தசாமி. யாழ்ப்பாணம்; பெண்கள் ஆய்வு வட்டம். பணிக்கர் வளவு. திருநெல்வேலி. 1வது பதிப்பு, 1989. (சென்னை 600002; சென்னை புக்ஸ், 6, தாயார் சாஹிப் 2வது ஒழுங்கை).

 பக்கம்; 277; அட்டவணைகள், 21; மட்டை, நூல்இழை — கோர்த்துக்கட்டல்; விலை; இந்திய ரூபா. 25/-;
 அளவு; 18X12 ச.மீ

பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை வெளிக்கொணரும் நூல், மூல நூலாசிரியர் காரைநகர் திமில. பள்ள சமூகத்தினருடன் வாழ்ந்து கண்டபல உண்மைகள் அடிப்படையிலான ஆதாரங்களைத் தருகின்றார்.

### 4. 2. அரசியல்

13. **இலங்கைத்தீவின் இனங்கள், இனப்பிரச்சினை என்பன பற்றிய ஒரு வரலாற்று அறிமுகம்** / உதயன் யாழ்ப்பாணம்: மறுமலர்ச்சிக் கழகம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 1வது பதிப்பு, 1985. (யாழ்ப்பாணம்).

 பக்கம்: (6); 44; மட்டை: நூல் இழை • குத்திக்கட்டல்;
 விலை: 4/- ; அளவு: 21X14 ச மீ.

இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை பற்றிய வரலாற்று நூல் வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து ஐரோப்பியர் காலம் வரை. ஐரோப்பியர் காலம், சுதந்திரத்துக்குப் பின், குடியரசுக் காலம், ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் வரலாறு ஒழுங்குபடுத்தப்பட்டு தரப்பட்டுள்ளது.

14. **மரபும் மார்க்கசியவாதிகளும்** , சி. சிவசேகரம். சென்னை 600 002: சென்னை புக்ஸ், 6, தாயார் சாகிப் 2 வது சந்து, 1வது பதிப்பு, 1989. (சென்னை 24: அலைகள் அச்சகம்).

 பக்கம்: 60; மட்டை: நூல் இழை - கோர்த்துக் கட்டல்;
 விலை: இந்திய ரூபா 8/-; அளவு, 18X13 சமீ.

அரசியல். சமூக, விஞ்ஞானம் தொடர்பாக அவ்வப்போது 'தாயகம்' சஞ்சிகையில் எழுதப்பட்ட கட்டுரைகளில், மரபும் மார்க்சியவாதியும், மதமும் மார்க்சியமும், மு. தளையசிங்கமும் மார்க்சியமும் ஆகிய மூன்று கட்டுரைகளின் தொகுப்பு.

## 4. 3 கல்வி.

15. **இருபதாம் நூற்றாண்டில் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி** / சுப்பிரமணியம் சந்திரபோஸ். யாழ்ப்பாணம்: ஆசிரியர், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).

பக்கம்: (12), 44 தகடுகள்: 01; மட்டை: கம்பி இழை; விலை: 10/- ; அளவு: 18X12 சமீ.

தாழ்த்தப்பட்ட தமிழர்கள் யார், கல்வி என்றால் என்ன? கல்வி யாருக்காக. 20ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி நிலை, 20ஆம் நூற்றாண்டில் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி என்ற நான்கு தலைப்புக்களின் கீழ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

16. **ஏ எம். ஏ. அஸீஸ் அவர்களின் கல்விச் சிந்தனைகளும் பங்களிப்பும்** / S. H. M. ஜெமீல். கல்முனை: ஸாஹிறாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம். 1ம் பதிப்பு, 1980 (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம், 18, மத்திய வீதி).

பக்கம்: 94, தகடுகள்: 1; மட்டை: நூல் இழை – குத்திக்கட்டல்; விலை: 9/-; அளவு: 18X12 சமீ.

கல்வியியல் துறையில் ஜனாப் A. M. A. அஸீஸ் அவர்களது சிந்தனை, பங்களிப்பு ஆகியன பற்றி 11 அத்தியாயங்களில் ஆராயப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக ஜனாப் அஸீஸ் அவர்களால் எழுதப்பட்ட நூல்கள், அவர் பற்றி பிறரால் எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், உரைகள் என்பனவற்றின் விபரப்பட்டியல் தரப்பட்டுள்ளது.

## 4. 4. நாட்டாரியல்.

### 4. 4. 1. கிராமியப்பாடல்கள்.

17. **கனிந்த காதல்** / ஆ மு ஷரிபுத்தீன். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, 1985. (வெள்ளவத்தை: சாமர அச்சகம், 22A, மல்லிகா ஒழுங்கை).

பக்கம்: 72; மட்டை: கம்பி இழை; விலை: 10/-; அளவு: 18X13 சமீ.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் களவொழுக்கம் குறித்துப் பாடப்பட்டுள்ள கிராமியப் பாடல்களின் தொகுப்பு. கதவுதிற கண்மணியே கதைத் திருக்க வாங்கமச்சான், என்ற இரு தலைப்புக்களில் முறையே கற்பும், களவும் விளங்க இரு கதைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

## 5. 0. மொழியியல்.

## 5. 1. தமிழ்மொழி.

### 5. 2. 1. தமிழ் இலக்கணம்.

18. **நன்னூற் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும்**/ F X C. நடராசா. காரைநகர் (யாழ் மாவட்டம்): தமிழ் வளர்ச்சிக்கழகம். 1வது பதிப்பு, 1982. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).

பக்கம்: (4), 20; மட்டை: கம்பி இழை; விலை; குறிப்பிடப்படவில்லை; அளவு: 18X12 சமீ.

விசாகப் பெருமாளைப் பற்றி எழுதிய காண்டிகை உரையைத் தழுவியும் கூட்டியும் திருத்தியும் புதுக்கியுமே நன்னூலுக்கு நாவலர் உரை எழுதினர் என்பது ஒரு சாராரின் கொள்கை. அக்கொள்கையைத் தக்க சான்றுகள் காட்டி மறுத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 6. 0. மருத்துவம்

19. **தாயாகப் போகும் உங்களுக்கு**/ எம். கே. முருகானந்தன்: பருத்தித்துறை: யதார்த்தா. 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ்).

பக்கம்: (8). 108; விளக்கப்படங்கள், அட்டவணைகள்; மட்டை: நூல் இழை - கோர்த்துக்கட்டல்; விலை சாதாரண பதிப்பு 25/-, விசேட பதிப்பு 30/-: அளவு: 21X14 சமீ.

கர்ப்பம். தாய்மை, ஆரோக்கியம், உடல்வனப்பு, பிரசவம், பிறந்த குழந்தையின் பராமரிப்பு ஆகிய விடயங்கள் தரப்பட்டுள்ளன எளிய தமிழில் விடயங்களும், கருத்துக்களும் பட விளக்கங்களும் காணப்படுகின்றன.

## 7. 0. கலைகள்.

## 7. 1. நாட்டியம்.

20. **பரதக்கலை**/ வி. சிவசாமி. யாழ்ப்பாணம்: (ஆசிரியர்) 1வது பதிப்பு, 1988 (யாழ்ப்பாணம்: நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட்).

பக்கம்: X, 146; மட்டை: நூல் இழை - கோர்த்துக்கட்டல்; விலை; சாதாரண பதிப்பு 30/-, விசேட பதிப்பு 50/-, நூலகக் கழிவு 10%, வர்த்தகக் கழிவு 15%;

அளவு: சாதாரண பதிப்பு 20.5 X 14ச. மீ, விசேட பதிப்பு 22X14 5 சமீ.

பரதக்கலை பற்றிய 15 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. நடராஜத் திருவுருவம், தமிழகத்தில் பல்வேறு காலங்களில் பரதக்கலை வளர்ச்சி, இலங்கையில் பரதக்கலை, சில நடன ஆசான்கள், வடமொழியில் உள்ள பரத சாஸ்திர நூல்கள் முதலியன குறிப்பிடத்தக்க கட்டுரைகளாகும்.

## 8. 0. இலக்கியம்.

### 8. 1. சம்ஸ்கிருத இலக்கியம்.

21. **சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள்**/ வி. சிவசாமி. யாழ்ப்பாணம், ஆசிரியர். 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட்).

    பக்கம்: X, 183, தகடுகள்: 1; மட்டை: நூல் இழை - குத்தீக்கட்டல்; விலை: சாதாரண பதிப்பு ரூ. 50/-, நூலகப் பதிப்பு 65/-, நூலகக் கழிவு 10%, வர்த்தகக் கழிவு 15%;
    அளவு: சாதாரண பதிப்பு: 20.5 X 13.5 சமீ. நூலகப்பதிப்பு 21.5 X 14.5 ச.மீ.

இதிலுள்ள 12 கட்டுரைகளில் சம்ஸ்கிருத இலக்கியத்தின் சில முக்கியமான அம்சங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. சம்ஸ்கிருத இலக்கியப் பரப்பு இருக்குவேதக் கவிதை, காளிதாசரும் இலக்கியப் பணிகளும், சம்ஸ்கிருத நாடகம். தோத்திர இலக்கியம், யாழ்ப்பாணத்துச் சம்ஸ்கிருத மரபில் நாவலர், சமஸ்கிருத காவியவியல் முதலியன குறிப்பிடத்தக்கவை.

### 8. 2. தமிழ் இலக்கியம்.

#### 8. 2. 1. கவிதைகள்.

22, **அணையாத அறிவாலயம்**/ சார்ள்ஸ். யாழ்ப்பாணம்: மாணவர் இளைஞர் பொதுமன்றம். 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம் கே. ரி. அச்சகம்).

    பக்கம்: 40; மட்டை கம்பி இழை; விலை: 15/-, நூலகக் கழிவு, 20%, வர்த்தகக் கழிவு 15%;
    அளவு: 18X13 சமீ.

1981இல் எரிந்த யாழ் பொதுசன நூலகம் பற்றிய கவிதைகளின் தொகுப்பு. ஈழநாடு, முரசொலி, திசை பத்திரிகைகளில் வெளிவந்த ஆசிரியரின் கட்டுரைகளும் அடங்குகின்றன.

23. **இதயமலர்**/ M. H. M. ஹலிம்தீன். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன 1வது பதிப்பு, 1985. (கொழும்பு 9: S. H. நிலாப்தீன், டெவலோ

பிரிண்ட், 69, ஸ்ரீதர்மராமா மாவத்தை)

பக்கம்: 135; மட்டை: கம்பி இழை; விலை: 20/-;
அளவு: 20×14 சமீ.

இஸ்லாமிய மணம், தமிழ்மணம் ஆங்கிலமணம் ஆகிய மூன்று பகுதிகளில் மொத்தம் 130 கவிதைகள் தரப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்களுக்கேற்ற பாடல்கள் அடங்கியது.

24. இயந்திரசூரியன் / மேமன் கவி. சென்னை 600 017; T. S. இராமலிங்கம், நர்மதா பதிப்பகம், 10 சோமசுந்தரம் வீதி, தியாகராஜநகர். 1வது பதிப்பு, 1984 (சென்னை 600 017: தமிழோசை அச்சகம், 84, ஹபிபுல்லா வீதி, தி. நகர்)

பக்கம்: 136; மட்டை: நூல் இழை, கோர்த்துக்கட்டல்;
விலை: இந்திய ரூபா 9/-; அளவு: 18×12 சமீ

புதுக்கவிதைகள் ஐம்பதின் தொகுப்பு.

25. இன்னமும் இருட்டினிலே / சார்ள்ஸ் யாழ்ப்பாணம்: மாணவர் கலை இலக்கிய மன்றம். 1ஆம் பதிப்பு, 1989, (யாழ்ப்பாணம்: கே. ரீ. அச்சகம்).

பக்கம்: 40; விளக்கப்படங்கள்; ஓவியம்; மட்டை: கம்பி இழை;
விலை: 15/-, நூலகக் கழிவு 20%, வர்த்தகக் கழிவு 15%;
அளவு: 18×13 சமீ.

நம் தேசத்தின் சமகால நிகழ்வுகளைப் பதிவுசெய்யும் இலக்கியக் கவிதைத் தொகுப்பு. சிறையினில் வாடும் இளைஞர்களின் வெளிப்பாடுகளைக் கவிதை மூலம் இந்நூலில் காணலாம்.

26. எழுவான் கதிர்கள் / அன்பு முகையதீன், பாலமுனைபாறூக். கல்முனை இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், சாய்ந்தமருது 1வது பதிப்பு, 1986. (கல்முனை: அஸீஸ் பிறிண்டிங்).

பக்கம்: X, 128, பின்னிணைப்பு 10 பக்கங்கள்; மட்டை: நூல் இழை — குத்திக்கட்டல்: விலை: 22/-; அளவு: 18.5 × 12.5 சமீ.

24 கவிஞர்களின் கவிதைத்தொகுப்பு. மரபுக்கவிதைகளும் புதுக் கவிதைகளும் சேர்ந்த தொகுப்பாக உள்ளது. 1970ஆம் ஆண்டின்பின் கவிதையாகத் தொடங்கிய கல்முனைப் பிரதேசக் கவிஞர்களின் கவிதைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக அக்கவிஞர்கள் பற்றிய "யார் எவர்?" அறிமுகக் குறிப்பும் காணப்படுகிறது.

27. **ஒரு சோவியத் கவிஞரின் புதுக்கவிதைகள்**/தமிழாக்கம் - கே கணேஷ் கொழும்பு 5: எழுத்தாளர் பதிப்பகம், 215, G 1/1 பார்க் வீதி. 1வது பதிப்பு, 1988 (கொழும்பு 13: பேர்ள் பிரிண்டர்ஸ், 48 B, K சிறில் சீ. பெரேரா மாவத்தை)

பக்கம்: 32; மட்டை: கம்பி இழை; விலை: 10/-;
அளவு: 19×14 சமீ.

சோவியத் கவிஞர் வியச்சிஸ்லாவ் குப்ரியானோவ் (Vyacheslav-kuprianov) அவர்களின் புதுக்கவிதைகள் 21இன் தமிழாக்கம்.

28. **ஓவியம்: குறுங்காவியம்** / சி. ஏ. எலியாசன். கொழும்பு 6: மலையக வெளியீட்டகம், 57 மகிந்த பிளேஸ்: 1வது பதிப்பு, 1988. (ஹல்கிரன் ஓயா: நவலங்கா பிரஸ், ராகலை).

பக்கம்: (28); மட்டை: கம்பி இழை; விலை: 10/-;
அளவு: 21×14 சமீ.

"கொழுந்து ஆயவும், தெங்கு பொறுக்கவும், ரப்பர்பால் சேகரிக்கவும் உரித்தானவர்களாக மட்டுமே - முகம் தெரியாத முத்திரைப் பெண்களாக, இலங்கைத் தபால் தலைகளில் இன்று வரையிலும் சித்திரிக்கப்படும் பெண்களுக்கு - அருளன் என்ற ஓவியன் கதாபாத்திரம் மூலம் உருவம் கொடுக்கப்பட்டுள்ளது." (சாரல்நாடான் அணிந்துரையிலிருந்து)

29. **காலத்தின் கோலங்கள்** / M. H. M. ஹலீம்தீன். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1 வது பதிப்பு. 1984. (கொழும்பு 2: Vat Print, 96, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை).

பக்கம்: 140; தகடுகள், புகைப்படங்கள்: மட்டை; கம்பி இழை; விலை: 20/-; அளவு: 18×14 ச. மீ.

சமுதாய முன்னேற்றத்தையும், தனி மனிதன் சீர்திருத்தத்தையும், தத்துவச் சிந்தனைகளையும் தாங்கிவரும் கவிதைத் தொகுப்பு.

30. **குழந்தைக்குயில், முதலாம் பகுதி** / க. ப. லிங்கதாசன். அட்டன்: மலையக எழுத்தாளர் மன்றம். 1 வது பதிப்பு, 1985. (மஸ்கெலியா: விக்டோரியா அச்சகம்)

பக்கம்: (10), 32; மட்டை: கம்பி இழை;
விலை: குறிப்பிடப்படவில்லை; அளவு: 22×14 சமீ.

32 குழந்தைப்பாடல்களின் தொகுப்பு. உறவுமுறை, பறவைகள், விலங்குகள், இயற்கைக் காட்சிகள் என்பவற்றை மையமாக வைத்து இளஞ் சிறுர்களுக்கு ஏற்ற வகையில் பாடல்கள் புனையப்பட்டுள்ளது.

31. குறிஞ்சித் தென்னவன் கவிதைகள் / குறிஞ்சித் தென்னவன். கொழும்பு 6: மலையக வெளியீட்டகம். 57 மகிந்த பிளேஸ் 1 வது பதிப்பு, 1987. (கண்டி: யூனியன் அச்சகம்)

பக்கம்: 40; மட்டை: கம்பி இழை;
விலை: 12/-, நூலகக்கழிவு 15%, வர்த்தகக்கழிவு 20%;
அளவு: 18 X 12 சமீ.

தேயிலைக்காடுகளிலும் மலைமுகடுகளிலும் வாழும் மக்களின் பிரச்சினைகளைப் பற்றியது.

32 செப்பனிட்ட படிமங்கள் / சி. சிவசேகரம். சென்னை 600002: சென்னை புக்ஸ், 6 தாயார் சாஹிப் 2 வது ஒழுங்கை. 1 வது பதிப்பு. 1988. (சென்னை 20: ராசகிளி பதிப்பகம், 12, முதலாவது பிரதான வீதி, நேரு நகர், அடையார்).

பக்கம்: 56; மட்டை: நூல் இழை - கோர்த்துக்கட்டல்; விலை: இந்திய ரூபா 7/50; அளவு: 18 X 12 சமீ.

தாயகம் புதிய பூமி, செம்பதாகை, செங்கொடி ஆகிய சஞ்சிகைகளில் 1983 – 86 காலப்பகுதிகளில் வெளியான ஆசிரியரின் கவிதைத் தொகுப்பு.

33. தியாக யந்திரங்கள் / சு. முரளிதரன் கொழும்பு 6: மலையக வெளியீட்டகம். 57 மஹிந்த பிளேஸ். 1 வது பதிப்பு. 1986. (கண்டி: ஹொரந்த ஹித்த நியூ பிரிண்டர்ஸ், 79 திருகோணமலை வீதி).

பக்கம்: 40; மட்டை: கம்பி இழை விலை: 10/50;
அளவு: 18 X 12 சமீ.

புதுக்கவிதைத் தொகுப்பு.

34. பாரதிபக்தன் பார்பரா கவிதைகள் / அனதோலி பார்ப்பரா, தமிழாக்கம் — கே. கணேஷ் கொழும்பு: எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம். 215, G1/1, பார்க் வீதி. 1 வது பதிப்பு. 1989. (கொழும்பு 6: சாமரா அச்சகம், 22 A, மல்லிகா ஒழுங்கை)

பக்கம்: 26; மட்டை: கம்பி இழை; விலை: 10/-
அளவு; 18 X 12 சமீ.

சோவியத் கவிஞரான அனதோலி பார்பராவின் 12 கவிதைகளின் தமிழாக்கம்.

35. **புதுப்புனல்** / அன்பு முகையதீன். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன. 1 வது பதிப்பு, 1988. (சென்னை 600 001: மில்லத் பிரின்டர்ஸ், 16 அப்பு மயிஸ்ட்ரி வீதி).

பக்கம்: 88; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்;
விலை: (25/-); அளவு: 18 X 12 சமீ.

மனித உணர்வுகளையும், சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் கவிதை உருவில் கூறியிருக்கிறார்கள். 28 கவிதைகளின் தொகுப்பு.

36. **விடியலின் காவல்** / சார்ள்ஸ் யாழ்ப்பாணம்: மாணவர் இளைஞர் பொதுமன்றம். 1 வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: கே. ரி. அச்சகம்).

பக்கம்: 40; விளக்கப்படம். ஓவியம்; மட்டை: கம்பி இழை:
விலை: 12/-; நூலகக் கழிவு 20%, வர்த்தகக் கழிவு 15%;
அளவு: 18 X 13 சமீ.

ஈழத்தில் நிகழ்ந்த சமகால சோக நிகழ்வுகளின் வெளிப்பாட்டைக் கவிதைகளாகத் தரும் நூல். பல்வேறு படுகொலைகள் நிகழ்வு கூறும் கவிதைகளும் அடங்குகின்றன.

37, **ஹிரோஷிமாவின் ஹீரோக்கள்** / மேமன் கவி. சென்னை 600 017: 10. சோமசுந்தரம் தெரு. தி. நகர். 1 ம் பதிப்பு 1982. (மதுரை: சாதனா ஆர்ட் பிரின்டர்ஸ், 59. கம்பர் நகர், சென்னை 600 034).

பக்கம்: 112; மட்டை: நூல் இழை - கோர்த்துக்கட்டல்;
விலை: இந்திய ரூபா 6/-; அளவு: 18 X 12.5 சமீ.

15 தலைப்புக்களில் அமைந்த புதுக்கவிதைகளின் தொகுப்பு.

## 8. 2. 2. நாடகங்கள்.

38. **மதமாற்றம்** / அ. ந. கந்தசாமி. கொழும்பு 5: எழுத்தாளர் கூட்டுறவுப்பதிப்பகம். 215, G 1/1 பார்க் வீதி, 1 வது பதிப்பு; 1989. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

பக்கம்: XII, 80; மட்டை: கம்பி இழை; விலை: 30/-;
அளவு: 21 X 14 சமீ,

அமரர் அ.ந.கந்தசாமியின் நாடகத்தின் நூலுருவாக்கம். மதம் என்ற கருத்தியல் இந்த நாடகத்தில் சாடப்பட்டுள்ளது. கதாநாயகன் அசல்

கிறிஸ்தவன், கதாநாயகி சைவப்பழம். காதலுக்காக இருவரும் மதம் மாறுகின்றனர். மாறிய மதத்தை இறுகத் தழுவிக் காதலைக் கைவிடுகின்றனர்

## 8. 2. 3. சிறுகதைகள்.

39. **தூரத்து பூபாளம்** / S. I. நாகூர் கனி. கொழும்பு 12: இஸ்லாமிய நலவுரிமைச் சங்கம், வாழைத்தோட்டம் 1 வது பதிப்பு, 1983 (கொழும்பு 12: ஷமீனு பிரஸ், 20. பிரைஸ் பிளேஸ்).
பக்கம்: 140; மட்டை: கம்பி இழை: விலை: 18/-; அளவு: 18 × 12 சமீ.

பரிசுக்கதைகள் மற்றும் பத்திரிகைகளில் வெளிவந்த 13 சிறுகதைகளின் தொகுப்பு. ஒவ்வொரு சிறுகதையின் முடிவிலும் பத்திரிகையில் அது வெளிவந்த போது பிரசுரமான வாசகர் விமர்சனக்கடிதங்களும் இடம் பெற்றுள்ளன.

40. **நாமக்கென்றொரு பூமி** / மாத்தளை சோமு. மதுரை 1: மீனாட்சி புத்தக நிலையம், 60 மேலக்கோபுரத் தெரு, சென்னை 14. 1 வது பதிப்பு, 1984. (சென்னை 14: ஜெயஸ்ரீ பிரின்டர்ஸ்).
பக்கம்: 128; மட்டை: நூல் இழை - கோர்த்துக்கட்டல்; விலை: இந்திய ரூபா 8/75; அளவு: 8 × 12 சமீ

மலையக மக்களையும் அவர்களது வாழ்க்கையையும் பகைப்புலமாகக் கொண்டு ஆக்கப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பு.

41. **பாதுகை** / டொமினிக் ஜீவா. சென்னை 600 098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 - பி. சிட்கோ இன்டஸ்ரீயல் எஸ்டேட். 3வது பதிப்பு. 1986 2வது பதிப்பு, 1979. 1 வது பதிப்பு 1962 (சென்னை 12: A. M. P. பிரஸ், 95 அன்னை சத்தியா நகர்).
பக்கம்: 140; நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: இந்திய ரூபா 10/-; அளவு: 18×12 சமீ.

பதினொரு சிறுகதைகளின் தொகுப்பு.

42. **மேகமலைகளின் ராகங்கள்** / மொழிவரதன். கொழும்பு 6: மலையக வெளியீட்டகம், 57, மகிந்த பிளேஸ். 1வது பதிப்பு, 1988. (கண்டி: ரோயல் அச்சகம், 190, கொழும்பு வீதி).

பக்கம்: 70; மட்டை: கம்பி இழை; விலை: 19/50;
அளவு: 18×12 5 சமீ.

மலைப்பிராந்தியச் சூழலைச் சித்திரிக்கும் 9 சிறு கதைகளின் தொகுப்பு.

43 மோகவாசல் / ரஞ்சன்குமார் பருத்தித்துறை: யதார்த்தா பிரசுரம். 1வது பதிப்பு, 1989 (யாழ்ப்பாணம்: விஜயா அழுத்தகம்).

பக்கம்: (6), 78; விளக்கப்பட ஓவியம் 7; மட்டை; நூல் இழை குத்திக்கட்டல்; விலை: 40, - ; அளவு: 21×14 சமீ.

சுருக்கு ஊஞ்சலும், கபராக் கொயாக்கள், காலம் உனக்கொரு பாட்டெழுதும், கோசலை, அரசி, கோளாறு பதிகம், மோக வாசல் ஆகிய ஏழு சிறுகதைகளின் தொகுப்பு.

44. யுகமலர் / யோகா பாலச்சந்திரன். கொழும்பு 6: ஜெயபாரதி வெளியீடு, 57 மகிந்த பிளேஸ் 1வது பதிப்பு 1983. (கொழும்பு12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி)

பக்கம்: (8), 96: மட்டை: கம்பி இழை; விலை: 15/ ;
அளவு: 18×12 சமீ.

பெண்களின் மன உணர்வுகளையும் உளைச்சல்களையும் துன்பங்களையும் விளக்கும் 12 சிறுகதைகளின் தொகுதி "பெண்விடுதலை உணர்வு, குடும்பப் பிணைப்பு. மத்திய கிழக்கு பணிப்பெண் வேலை குடும்ப பற்றுப் பாசம், மதுவால் பெண்கள் அடையும் துன்பங்கள். பெண்களின் துணிச்சலான முற்போக்கான முடிவுகள் ஆகியவை கதைகளில் ஊடுருவி நிற்கின்றன." (செ கணேசலிங்கம், சிறப்புரையில்).

45. வாழ்க்கையி ் சுவடு ள் / நயீமா சித்தீக் கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1வது பதிப்பு, 1987. (மட்டக்களப்பு: செண் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).

பக்கம்: 60; மட்டை: கம்பி இழை; விலை: 20/-;

அளவு: 18×12 சமீ.

பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியான 11 சிறுகதைகளின் தொகுப்பு. நூலின் அட்டையில் வாழ்க்கைச் சுவடுகள் என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

18

## 8. 2. 4. நாவல்கள்

46. **அங்கமெல்லாம் நெறஞ்சமச்சான்** / ஏ. வி. பி கோமஸ். கண்டி: தமிழ் மன்றம் கல்ஹின்ன. 1வது பதிப்பு. 1988. (கொழும்பு 2: VAT PRINT, 96, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை).
பக்கம்: 56; மட்டை: கம்பி இழை; விலை: 10/-;
அளவு: 17 X 12 சமீ.

தேயிலைத் தோட்டத்தில் மலர்ந்த ஒரு காதல் கதையை நாட்டார் பாடல் இடையிட்ட இக்குறுநாவல் விபரிக்கின்றது 1965 இல் சுதந்திரன் வார இதழில் தொடராக வெளியிடப்பட்டது.

47. **ஓ அந்த அழகிய பழைய உலகம்** / செங்கை ஆழியான், யாழ்ப்பாணம்: ரஜனி வெளியீடு. 2வது பதிப்பு 1988. முதற் பதிப்பு, 1984 (யாழ்ப்பாணம்: அன்பு பிரின்டர்ஸ்).
பக்கம் VI, 66: மட்டை; கம்பி இழை: விலை ; 8,50:
அளவு : 21 X 14 சமீ

இரு வேறுபட்ட களங்கள் முரண்பட்ட பாத்திரங்கள் என்பன ஒப்பீட்டு வகையாக விபரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளன நகர்ப்புறங்களின் சந்தடி மிக் தும் நவீன நாகரிகம் நிலைத்ததும். இயந்திரமயமானது மான வாழ்வும், கிராமப்புறங்களின் அமைதியும் அழகும் இயற்கையோடு இணைந்ததுமான வாழ்வும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன.

48. **கோவும் கோயிலும்** / ந. பாலேஸ்வரி. திருகோணமலை; நரெசி வெளியீடு. 157, டைக் வீதி. 1வது பதிப்பு, 1987 (யாழ்ப்பாணம் : செட்டியார் அச்சகம்).
பக்கம் : VIII, 1200: மட்டை: நூல் இழை – குத்திக்கட்டல்:
விலை : 7,90 ; அளவு : 18 X 12. 5சமீ.

ஈழத்திற்குப் பெருமை தேடித்தரும் தேவாரம் பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரர் கோவிலின் வரலாற்றைப் பகைப்புலமாகக் கொண்ட வரலாற்று நாவல். 1977இல் தினகரன் வாரமஞ்சரியில் நெடுங்கதையாகப் பிரசுரமானது.

49. **தெய்வ தரிசனம்** / செ. குணரத்தினம். மட்டக்களப்பு: உதயம் வெளியீடு, புனித செபஸ்தியார் பிரசுராலயம். 1வது பதிப்பு.

1988. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் பிரசுராலயம், 65, லேடி மனிங் டிறைவ்).

பக்கம் : IV, 152 ; மட்டை : கம்பி இழை: விலை : குறிப்பிடப் படவில்லை: அளவு : 18 X 12 சமீ

மட்டக்களப்புப் பேச்சுவழக்கில் அமைந்து மண்வாசனை வீசும் நாவல் அம்பாறை - இக்கினியாகலை போன்ற குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பித்த வேளையில் தொழில் ரீதியாகத் தங்கள் பங்களிப்பைச் செய்து வந்த "வத்தை" ஓட்டிகளின் வாழ்க்கையை, அவர்கள் பொருளாதாரத்தை, அவல நிலைகளைக் காட்டும் நாவல்.

50. **ஷாமிலாவின் இதய ராகம்** / ஜெக்கியா ஜுனைதீன் பேராதனை; ஸினத் முற்போக்கு தமிழ்மன்றம், 7 A ஹேந்தெனிய. 1வது பதிப்பு, 1989. (கொழும்பு 9 ; S. H. நிலாப்தீன், டெவலோ பிரின்ட், 33 அல்பியன் ஒழுங்கை).

பக்கம் : (8), 264: மட்டை: கம்பி இழை: விலை : 50/-; அளவு : 18 X 12 சமீ.

இஸ்லாமிய சமூகப்பின்னணியில் எழுதப்பட்ட நாவல். சமூகத்தில் புரையோடியுள்ள பல்வேறு வகைப்பட்ட உணர்வுகளையும் அதனால் விளையும் விபரீதங்களையும் விளக்குகின்றது "சிந்தாமணி" வார இதழில் தொடர்கதையாக வெளியிடப்பட்டது.

## "திருக்கோணமலை"

### நூல் அறிமுகவிழா

திரு கா இரத்தினலிங்கம் அவர்களின் "திருக்கோணமலை" என்ற நூல் அறிமுகவிழா கடந்த 25-2-90 அன்று பி. ப 4 30 மணியளவில் திருக்கோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் திரு. மலைமதி சந்திரசேகரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

திரு. எஸ். கணேசலிங்கம் அவர்கள் வரவேற்புரையை நிகழ்த்தினர். பண்டிதர் சி. வைரமுத்து அவர்கள் நூல் அறிமுகம் செய்தார். சுவாமி சுந்தர தேவா, எஸ். ஜோசப், ஜே. சகாப்தீன், க. கோணேஸ்வரன், தாபி. சுப்பிரமணியன், விக்னேஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினர். ஆசிரியரின் பதிலுரையின் பின் திரு. என். செல்வஜோதி நன்றிதெரிவித்துப் பேசினர்.

# சிறப்புக்கட்டுரை

## ஈழத்து நூல் வெளியீடுகளும் அவற்றிற்காக சர்வதேச தராதர நூல் வழங்கலும்

— என். செல்வராஜா

இலங்கையிலுள்ள எழுத்தாளர்களையும் வெளியீட்டாளர்களையும் ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் பரவலாக இடம்பெற்ற வண்ணம் உள்ளன இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களது ஆக்கங்களின் கையெழுத்துப் பிரதியை விலை கொடுத்து வாங்குவதும், எழுத்தாளர்களுக்கு ஒரு கணிசமான தொகையைக் கொடுத்து அதற்குப் பெறுமதியான நூலை 20% கழிவுடன் கொள்வனவு செய்வதும் இன்று நடைமுறையில் உள்ள விடயங்கள் ஆனால் இது தமிழ் நூல் வெளியீட்டு முயற்சியில் ஈடுபட்டு வரும் எம்மவரில் எத்தனை பேருக்கு தெரிந்துள்ளது என்பது கேள்விக்குரியதாகும்.

இலங்கை வெளியீடுகளையும் வெளியீட்டாளர்களையும் சர்வதேச அரங்கில் அறிமுகம் செய்து வைக்கும் வகையில் அண்மையில் மற்றொரு புதிய விடயம் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அது இலங்கையில் வெளியிடப்படும் நூல்களுக்கு சர்வதேச தராதர நூல் எண் வழங்கும் திட்டமாகும் ஆங்கிலத்தில் International Standard Book Number என்று வழங்குவர். இதன் குறுக்கம் I S B N என்தாகும்.

70களுக்குப் பின் ஐரோப்பிய நாடுகளில் வெளியிடப்பட்ட நூல்களின் பின் புற அட்டையில் I S B N என்ற ஆங்கில எழுத்துக்களும் அதைத் தொடர்ந்து சில இலக்கங்களும் அச்சிடப்பட்டிருப்பதை அவதானிக்கலாம் இதுவே சர்வதேச நூல் தராதர எண்ணாகும். ஒரு நூலினை இலகுவில் அடையாளம் கண்டு கொள்ள இந்த இலக்கங்கள் பயன்படுகின்றன.

சர்வதேச தராதர நூல் எண் வகுக்கும் முறையானது ஜெனிவாவிலுள்ள சர்வதேச தராதர நிறுவனத்தினால் International Standard Organisation (I S O) 1972 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. நூல் வெளியீட்டில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் பல தமது வெளி

யீடுகளை இலகுவில் இனங்கண்டுகொள்ள அவற்றுக்கு ஏதோவொரு ஒழுங்கில் இலக்கங்களை வழங்கி வந்துள்ளன. நிறுவனத்துக்கு நிறுவனம் இந்த இலக்கம் வழங்கும் முறை மாறுபடுவதியல்பு. நூலீட்டல் கடமைகளில் ஈடுபடும் நூலகர்களும், வர்த்தகர்களும் சம்பந்தப்பட்ட வெளியீட்டு நிறுவனத்தின் வர்த்தக நூற்பட்டியலைப் பார்வையிட்டு அதில் குறிப்பிட்ட நூல்களுக்கு வழங்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கத்தினை எழுதி அனுப்பி உரிய நூலை இலகுவாகத் தெரிந்து பெற்றுக் கொள்கின்றனர். இம்முறையால் எழுத்து வேலைகள், கணிசமான அளவு குறைக்கப்படுகின்றது.

1960 களின் பிற்பகுதியில் கணனியின் (கொம்பியூட்டர்) பாவனை நூல் வர்த்தகத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது. அதையடுத்து நூல் வெளியீட்டு நிறுவனங்கள் தமது நூற் தரவுகளைக் கணனிமயப்படுத்துவதற்கு ஏற்ப தாம் தனித்தனியாக மேற்கொண்டு வந்த குறியீட்டு எண் வழங்கும் முறையில் மாற்றத்தினை எதிர்நோக்கினர். பொதுவான ஒரு முறை இங்கு குறியீட்டு எண் வழங்கலில் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சர்வதேச ரீதியில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் இத்தகைய இலக்கங்களை வழங்க வேண்டிய அவசியம் உணரப்பட்டதன் பயனாக ஜெனிவாவில் 1972 ஆம் ஆண்டு சர்வதேச தராதர ஸ்தாபனம் இப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. ஐக்கிய இராச்சியத்தில் 1967 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த நூல்களுக்கு குறியீட்டு இலக்கம் வழங்கும் முறையே சற்று மாற்றத்துடன் சர்வதேச தராதர நூல் எண் வழங்குவதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சர்வதேச தராதர நூல் எண் நான்கு பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதி நூல் வெளியிடப்பட்ட நாட்டைக் குறிக்கும், மற்றது அந்த நூலின் வெளியீட்டாளரைக் குறிக்கும், மூன்றுவது பகுதி நூலின் தலைப்பைக் குறிக்கும், இறுதிப்பகுதி பரிசோதனை இலக்கம் எனப்படும் மேற் குறிப்பிட்ட நான்கு தொகுதிகளையும் உள்ளடக்கிய ச. த. நூ. எண் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள சர்வதேச தராதர நிறுவனத்தின் பிரதிநிதியாக விளங்கும் தேசிய நூலகத்தினுல் மட்டுமே வழங்கப்படும்.

ஜெனிவாவில் இயங்கும் தலைமை நிலையத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலக்கம் வழங்கப்படுகின்றது. இதுவே அந்த நாட்டுக்குரிய எண்ணுகக் கருதப்பட்டு ச. த. நூ. எண்ணின் முதலாவது பகுதியாகக் குறிப்பிடப்படுகின்றது இலங்கை 1986 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் சர்வதேச தராதர நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்றுக்கொண்டது.

இலங்கையில் தேசிய நூலகம் இல்லை. ஆயினும் தேசிய நூலகத்தின் கடமைகளை இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை பொறுப்பேற்றுள்ளது (மேற்படி சபை, ஏப்ரல் மாதத்தில் தேசிய நூலகமாக வைபவ ரீதியாக தனது கடமைகளை ஆற்றவிருப்பது ஒரு செய்தி). இதன் காரணமாக இலங்கையில் சர்வதேச நூல் தராதர எண் வழங்கும் உரிமை இலங்கை தேசிய நூலக சேவைகள் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள (நாட்டுக்குரிய) எண் 955 என்பதாகும்.

இரண்டாவது பிரிவு இலக்கமான வெளியீட்டாளர் குறியீட்டிலக்கம் இ. தே. நூ. சே சபையினால் பதிவு செய்யப்பட்ட வெளியீட்டாளர்களுக்கு அவர்கள் பதிவு செய்யப்பட்ட ஒழுங்கில் வழங்கப்படுகின்றது. தமிழ்ப் பிரதேசத்திலுள்ள வெளியீட்டாளர்கள் எவரும் இது வரை இந்தப் பதிவுக்காக விண்ணப்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது போதிய தகவல்கள் இன்மையே இதற்கு காரணமாகும்.

தனது வெளியீட்டு நிறுவனத்தை அல்லது தம்மை ஒரு வெளியீட்டாராகப் பதிவு செய்து கொள்வது சிரமமான காரியமில்லை. முதலில் மேற்படி தேசிய நூலக சேவைகள் சபையினால் தயாரிக்கப்பட்ட ஒரு விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும், அதனைப் பூர்த்தி செய்து அவர்களுக்கு அனுப்பி வைத்தால் போதுமானது. அவ்விண்ணப்பப் படிவத்தில் வெளியீட்டாளரின் பெயர், முகவரி கடந்த காலங்களில் வெளியிட்ட நூல்கள், திட்டமிடப்பட்டுள்ள நூல்கள் போன்றவை தொடர்பான விபரங்கள் கேட்கப்பட்டிருக்கும்.

வெளியீட்டாளர்களை மூன்று பிரிவாக வகைப்படுத்தியுள்ளனர்.

1. வர்த்தக நோக்கத்தில் வெளியீட்டு முயற்சியில் ஈடுபடும் நிறுவனங்கள்.
2. அரசாங்க / அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்கள், நிறுவனங்கள்.
3. தனிநபர் வெளியீட்டாளர்கள், நூலாசிரியர் வெளியீட்டாளர்கள் என்பனவே அவையாகும்.

வெளியீட்டாளர்களுக்குப் பதிவிலக்கம் வழங்கப்பட்டதும் அப்பதிவுகள் யாவும் காலத்துக்குக் காலம் வெளியீட்டாளர் வழிகாட்டி (ஆண்டு நூல்) நூலில் பிரசுரிக்கப்படும், அதே வேளையில் அந்த ஆண்டு நூலின் பிரதிகள் அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படும் ஜெனிவாவில் வெளியிடப்படும் சர்வதேச வெளியீட்டாளர் வழிகாட்டியில் இவை காலத்துக்குக் காலம் சேர்த்துக்கொள்ளப்படும்.

குறிப்பிட்ட ஒரு வெளியீட்டாளருக்கு வழங்கப்பட்ட இலக்கம் எக் காரணம் கொண்டும் மற்றொருவருக்கு வழங்கப்படமாட்டாது.

ஒரு வெளியீட்டாளர் தான் நூலை வெளியிடத் தீர்மானித்ததும் அச்சகத்துக்குக் கையெழுத்துப் பிரதியை அனுப்பும் முன்னர் நூலில் விபரத்தை அதற்கென இருக்கும் ஒரு படிவத்தில் (படிவ இலக்கம் N L : I S B N: F 5) குறித்து நூலக சேவைகள் சபைக்கு அனுப்பி வைககவேண்டும். படிவங்களை வெளியீட்டாளராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டவர்களுக்கு சபை முன்னதாகவே அனுப்பி வைப்பது வழக்கம் இப் படிவத்தில் ஆசிரியர் பெயர், தலைப்பு, பதிப்பு, விபரம், தொகுதி பாகம் வெளியிடவுள்ள வருடம். மாதம். எத்தனை பிரதிகள் வெளியிடப்படவுள்ளது. உத்தேச விலை, என்ன விடயம் தொடர்பான நூல் போன்ற விபரங்கள் கோரப்பட்டிருக்கும்.

சில நூல்கள் நூலகப் பதிப்பு. சாதாரண பதிப்பு என்று இருவகையில் வெளிவருவதுண்டு. ஒரே நூலின் சாதாரண பதிப்புக்கும் நூலகப் பதிப்புக்கும் வெவ்வேறு பைண்டிங் முறை மாறியிருப்பினும் அது வேறு இலக்கத்தை பெற்றுக் கொள்ளும். ஒரு நூல் வெளியிடப்பட்டு இரண்டாவது பதிப்பு, மாற்றம் எதுவும்மின்றி மறு பிரசுரமாக வெளியிடப்பட்டால் Reprint அது இரண்டாவது பதிப்பு எனக் கணக்கில் எடுக்கப்பட மாட்டாது. முன்னர் வழங்கப்பட்ட இலக்கத்தையே அந்தப் புதிய பதிப்புக்கும் வழங்கலாம். ஆனால் மறுபதிப்பானது மாற்றங்களுடன் வெளியிடப்படுமாயின் Revised edition அது புதிய அல்லது இரண்டாவது பதிப்பு எனக் கணக்கில் எடுக்கப்பட்டு புதிய நூல்இலக்கம் வழங்கப்படும்.

ஒரு வெளியீட்டாளர் பதிவு செய்யும் நூல்கள் தொடர் இலக்க ஒழுங்கில் பதியப்பட்டும் அந்தத் தொடரிலக்கம் சர்வதேச தராதர நூல் எண்ணின் மூன்ருவது பிரிவில் தரப்படுகின்றது.

ச த நூ. எண் பின்வரும் உருவ அமைப்புள்ள வெளியீடுகளுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றது.

1. அச்சிடப்பட்ட நூல்கள், சிறு நூல்கள் (Pamphlets)
2. நுண்வடிவிலான (Microform) வெளியீடுகள்.
3. பிறெயில் முறையிலான வெளியீடுகள்.
4. ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்யப்பட்ட வெளியீடுகள்
5. நுண் கணனிகளில் பயன்படுத்தப்படும் நாடாக்கள்.
6. கல்வி, கற்பித்தலுடன் தொடர்பான பிற படச்சுருள் சாதனங்கள்.

மேலும் நாட்குறிப்புக்கள் (Diaries), கலண்டர்கள், விளம்பரப் பிரசுரங்கள் நாடக கலை நிகழ்ச்சி நிரல்கள், நிறுவன வழிகாட்டிகள் (Prospectus) தலைப்புப்பக்கம், விளக்கம் போன்றவற்றைக் கொண்டிராத படங்கள், ஒலிப்பதிவுகள், மற்றும் ஆண்டுமலர்கள் ஓரினப் பொருள் பற்றிய நூல்வரிசை ஆகியன தவிர்ந்த சஞ்சிகை வெளியீடுகள் ஆகியவையும் சர்வதேச தராதர நூல் எண் பெறத் தகுதியற்றவையாகும். சஞ்சிகைகளைப் பொறுத்தவரையில் சர்வதேச பருவ வெளியீட்டுத்தராதர எண் (I S S N) வழங்கும் முறை நடைமுறைக்கு வந்துவிட்டபோதிலும் இலங்கையில் இன்னும் அது அறிமுகப்படுத்தப் படவில்லை

ஒரு வெளியீட்டாளர் தனது குறிப்பிட்ட ஒரு வெளியீடு ச.த நூ. எண் வழங்கப்படுவதற்குத் தகுதியானதாவென்பதை மேற்கண்ட விபரங்களின் மூலம் தெரிந்துகொள்ளலாம்

ஏற்கனவே வெளியிடப்பட்டு விட்ட ஒரு நூலுக்கு தராதர எண் கோரி விண்ணப்பிக்கக்கூடாது. குறிப்பிட்ட நூலை மறுபிரசுரம் செய்ய முற்படும் வேளையில் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்

ஒரு வெளியீட்டாளர் இலங்கை தேசியநூலக சேவைகள் சபையில் தம்மை வெளியீட்டாளராகப் பதிவு செய்து கொள்வது முதல் நூலுக்கு தராதர இலக்கம் பெற்றுக் கொள்வது வரை எந்தக் கால கட்டத்திலும் சேவைகள் இலவசமாகவே வழங்கப்படுகின்றது. கட்டணம் எதுவும் அறவிடப்படுவதில்லை. பதிவுப்பணம் பெறுதல், பதிவுக்குஉரித்துடைய ஒருவெளியீட்டாளரைத் தகுந்த காரணமின்றிப் பதிவு செய்யாது தவிர்த்தல் போன்றவை தராதர இலக்கத்தை வழங்க அனுமதி பெற்ற தேசிய நிறுவனத்தினைப் பாதிக்கக்கூடும் எனவே இன மத, மொழி வேறுபாடுகளுக்கு இங்கு இடமிருக்காது என நம்பலாம்.

தராதர இலக்கத் தொகுதியின் இறுதிப்பிரிவு – நான்காவது பிரிவு பரிசோதனை இலக்கமாகும். முன்னைய மூன்று பிரிவு இலக்கங்களும் சரியான முறையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை ஒரு வாய்பாடுமூலம் அறிந்து கொள்வதற்காக இப்பிரிவு இலக்கம் பயன்படுத்தப்படும். இவ்விலக்கம் எப்போதும் ஒரு தான இலக்கமாகவே காணப்படும்.

சர்வதேச தராதர நூல் எண் வழங்குவதால் ஒரு ஈழத்து வெளியீட்டாளருக்கு என்ன நன்மை கிட்டப் போகின்றது என்று சிந்திக்கக் கூடும். தேசிய நூலக சேவைகள் சபையில் ஒரு வெளியீட்டாளரோ அவரது நூலோ பதிவு செய்யப்படுவது முக்கியமானதொரு விடயமாகும் தேசிய மட்டத்தில் ஒரு தமிழ் நூல் கணக்கில் எடுக்கப்படவேண்டுமாயின் இத்தகைய பதிவுகள் அவசியமானவை. இன்று தமிழ்பிரதேசத்தில் வெளியிடப்பட்டுள்ள பல நூல்கள் கொழும்பு ஆவணங்காப்பகத்

துக்கு பதிவிற்கென அனுப்பப்படுவது குறைவு. இதைச் செய்ய வேண்டியவர்கள் அச்சகத்தினரே. தபால்கந்தோரில் பார்சல்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்ற காரணத்தால் ஒரு நூலின் பிரதிகள் ஆவணக்காப்பகத்துக்கு அனுப்பப்படுவதில்லை. ஒரிரு அச்சங்கள் மாத்திரம் விதி விலக்காக நூல்களை அங்கு இன்றும் அனுப்பிவருகின்றன. இந்த நூல்களே தேசிய மட்டத்தில் ஈழத்துத் தமிழ் நூல்கள் என்ற இடத்தைப் பெற்றிருக்கின்றன.

சர்வதேச தராதர நூல் எண்ணைப் பெற்றவர் என்பதால் நவீனமயப் படுத்தப்பட்ட நூல் வெளியீட்டுத்துறையில் எம்மவரும் நுழைந்து விடுகின்றனர். காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சர்வதேச வெளியீட்டாளர் வழிகாட்டியில் எம்மவரின் பெயரும் இடம் பெறுமாகையால் காலக்கிரமத்தில் சர்வதேச மட்டத்தில் அவர்களுக்கு ஒரு அறிமுகம் கிட்டுவது சாத்தியமாகின்றது. நூல் தேர்வு நடவடிக்கையை நவீன மயப்படுத்த கணனிகள் பயன்படுத்தப்படுகின்ற இவ் வேளையில் இத்தகைய பொதுவான முறையைப் பின்பற்றுவதன் மூலம் கணனி யுகத்துக்குள் பிரவேசிக்க எம்மைத் தயார்படுத்திக்கொள்ள முடிகிறது.

சர்வதேச தராதர நூல் எண் பெற்றதும் அவ்விலக்கத்தை நூலின் பின்புற அட்டையில் துலக்கமாக அச்சிடல் வேண்டும். இதை நூலின் அடிப்பகுதியில் "10 பொயின்ட்" அச்சுகளால் குறிப்பிடல் வேண்டும். மேற்குறிப்பிட்ட இடத்தில் இலக்கத்தைக் குறிக்க முடியாதவிடத்து தெளிவாகத் தெரியக்கூடியவாறு மட்டையின் ஒரு பகுதியில் பொறிக்கப்படவேண்டும். மேலும், இவ்விலக்கம் தலைப்புப் பக்கத்தில் பின்புறத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். ISBN என்ற நான்கு ஆங்கில எழுத்துக்களுடன் நூலுக்கான எண்ணை அதன் நான்கு பிரிவுகளையும் வேறுபடுத்தத்தக்கவாறு குறுக்குக் கோடிட்டு அச்சிட வேண்டும்.

உதாரணம் ISBN 955 — 9011 — 40 — 5

நூலுக்கு உறை போடப்பட்டு (Jacket) விற்பனை செய்யுமிடத்து, அந்த உறையின் பின்புறமும் இவ்விலக்கம் பொறிக்கப்படவேண்டும்.

I S B N பதிவு தொடர்பாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

ISBN AGENCY,
SRI LANKA NATIONAL LIBRARY SERVICES BOARD,
P O Box 1764, COLOMBO

# நூல் ஆசிரியர் அட்டவணை


அன்பு முகையதீன் 26, 35
உதயன் 13
எலியாசன், சி. ஏ. 28
கணபதிப்பிள்ளை, மு. 08
கணேஷ், கே 27, 34
கந்தசாமி, அ. ந. 38
கந்தசாமி, பார்வதி 12
கந்தையா ஆ. 05, 09
குணரத்தினம், செ 49
குப்ரியானேப், வியச்சிஸ்லாவ் 27
குறிஞ்சித் தென்னவன் 31
கோமஸ், ஏ. வி. பி. 46
சந்திரபோஸ், சுப்பிரமணியம் 15
சார்ள்ஸ் 22, 25, 36
சித்தீக், நயீமா 45
சிதம்பரப்பிள்ளை, ம. சி. 04
சிவசாமி, வி. 20, 21
சிவசேகரம், சி 14, 32
சுவாமிநாத பண்டிதர் 07
செங்கை ஆழியான் 47
செல்வராஜா, என். 02
நடராஜா, எப். எக்ஸ். சி. 18
நாகூர் கனி, எஸ். ஐ. 39
பாக்கியநாதன், வே, இ. 03
பார்ப்பரா, அனஸ்தாவி 34
பாலச்சந்திரன், யோகா 44
பாலசுந்தரம், விமலாம்பிகை 01
பாலேஸ்வரி, ந 48
பாறூக், பாலமுனை 26
மாத்தளை சோமு 40
மீ ஆத், எம். வை. எம். 11
முரளிதரன், சு. 33
முருகானந்தன் எம் கே. 19
மேமன் கவி 24. 37
மொழிவரதன் 42
ரஞ்சகுமார் 43
லிங்கதாசன், க ப. 30
வடிவேல், இ 06
வைத்தீஸ்வரக் குருக்கள், க. 07
ஜீவா, டொமினிக் 41
ஜுனைதீன், ஜெக்கியா 50
ஜெமீல், எஸ் எச். எம். 16
ஸ்யோன்ஸ் பெர்க், எல்செ 12
ஹலிம்தீன், எம் எச். எம் 23, 29
ஹனிபா, எஸ். எம். 10
ஷரிபுத்தீன், ஆ. மு. 17


# நூல் தலைப்பு அட்டவணை


அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான். 46
அணையாத அறிவாலயம் 22
இதயமலர் 23
இயந்திர சூரியன் 24
இருபதாம் நூற்றாண்டில் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி 15
இலங்கைத் தீவின் இனங்கள், இனப்பிரச்சினை என்பன பற்றிய ஒரு வரலாற்று அறிமுகம் 13
இன்னமும் இருட்டினிலே 25
இன்னுமொரு ஜாதி 12
உத்தமத்தூதர் 10
எ. எம். எ. அஸீஸ் அவர்களின் கல்விச் சிந்தனைகளும் பங்களிப்பும். 16
எழுவான் கதிர்கள் 26
ஒரு சோவியத் கவிஞரின் புதுக் கவிதைகள் 27
ஓ அந்த அழகிய பழைய உலகம் 47
ஓவியம் 28
கல்வி நிறுவன நூலகங்கள் 01

கனிந்த காதல் 17
காலத்தின் கோலங்கள் 29
கிராமிய நூலகங்களும்
அபிவிருத்தியும் 02
குழந்தைக் குயில் 30
குறிஞ்சித் தென்னவன்
கவிதைகள் 31
கோவும் கோயிலும் 48
சமஸ்கிருத இலக்கியச்
சிந்தனைகள் 21
சுவாமி ராமதாஸ்
அருளுரைகள் 04
செப்பனிட்ட படிமங்கள் 32
செவ்வேள் 05
ஞானச் சுடர் 09
தாயாகடபோகும் உங்களுக்கு 19
தியாக யந்திரங்கள் 33
திருக்கோணமலை மாவட்ட
திருத்தலங்கள் 06
திருமுறைப் பெருமை 07
தூயியின் தசாம்ச வகுப்பு:
18 ஆம் பதிப்பு 03
தூரத்து பூபாளம் ‌9
தெய்வ தரிசனம் 49
நபிகள் பெருமானின்
நல்லுரைகள் 11
நமக்கென்றொரு பூமி 40
நன்னூற் காண்டிகை உரையும்
நாவலர் பெருமானும் 18
பரதக் கலை 20
பராசக்தி பாமாலை 08
பாதுகை 41
பாரதி பக்தன் பார்ப்பரா
கவிதைகள் 34
புதுப்புனல் 35
மதமாற்றம் 38
மரபும் மார்க்சியவாதிகளும் 14
மேக மலைகளின் இராகங்கள் 42
மோகவாசல் 4
யுகமலர் 44
வாழ்க்கையின் சுவடுகள் 45
விடியலின் கானம் 36
ஹிரோஷிமாவின்
ஹீரோக்கள் 37
ஷாமிலாவின் இதயராகம் 05

## திருக்கோணமலையில் கலந்துரையாடல்

திருக்கோணமலை மாவட்ட எழுத்தாளர்களும், வெளியீட்டாளர்களும் பங்கு கொண்ட கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்று 25.2.90 அன்று காலை 10.00மணிக்கு திருக்கோணமலை பொது நூலகத்தின் சிறுவர் பகுதி மண்டபத்தில் இடம் பெற்றது. சிறப்பு விருந்தினராக "நூலகவியல்" ஆசிரியரும், அயோத்தி நூலக சேவைகள் இயக்குனருமான திரு. என். செல்வராஜா அவர்கள் கலந்துகொண்டு இலங்கையில் சர்வதேச தராதர நூல் வழங்குவது பற்றிய தகவல்களைத் தெரிவித்தார். வாசக வட்ட தலைவர் திரு நவரத்தினம் தலைமை தாங்கினர். திருக்கோணமலை நகராட்சிமன்ற உதவி நூலகர் திரு. என். செல்வஜோதி நன்றியுரை வழங்கினர்

## பத்திரிகைத்துறையில் ஒரு புதிய நூல்

"தகவல் தொடர்பு சாதனங்களும் செய்தியாளர்களும்" என்ற தலைப்பில் புதிய நூல் ஒன்றை வெளியிடும் நடவடிக்கைகள் திரு. க. இரத்தினலிங்கத்தினுல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன 'டர்ஷிகா கிரீயேஷன்ஸ், நிறுவனத்தினுல் இப் பிரசுரம் வெளியிடப்படவுள்ளது.

# அறிவித்தல்

தமது நூலை "நூல் தேட்டத்தில்" சேர்த்துக்கொள்ள விரும்பும் ஈழத்துத் தமிழ் நூல் எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் நூலின் பிரதியொன்றினை எமக்கு அனுப்பிவைக்கவும். 1980 ஆம் ஆண்டிற்குப் பின் வெளிடப்பட்டவை மாத்திரம தற்போது பதிவுக்கு ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது.

சஞ்சிகைகள் வெளியிடுவோரும் தமது சஞ்சிகையின் இறுதியாக வெளிவந்த இதழ் ஒன்றுடன் சந்தா விபரம், ஆரம்பித்த திகதி, சஞ்சிகை பற்றியகுறிப்பு ஆகியவற்றையும் எழுதி அனுப்பி வைக்கவும்

நூல் வெளியீட்டுவிழா மற்றும் எழுத்தாளர்களுக்கும்வெளியீட்டாளர்களுக்கும் பயனளிக்கக் கூடிய செய்திகளை அனுப்பினால் செய்திகோவை பகுதியில் பிரசுரிக்கப்படும்.

சிறப்புக்கட்டுரைப் பகுதியில் பிரசுரிப்பதற்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன. ஆக்கங்கள் யாவும் வெளியீட்டுத்துறையுடன் சம்பந்தப்பட்டதாகவும், குறித்த காலப்பகுதியில் வெளியிடப்பட்ட துறைசார் நூல்கள் பற்றிய தரமான ஆய்வுக் கண்ணோட்டங்களாகவும் இருத்தல் விரும்பத்தக்கது. கையெழுத்துப் பிரதி ஆறு தட்டச்சுத் தாளகளுக்கு மேற்படாதவாறு அமைதல் வேண்டும்.

இந்த சஞ்சிகை வெளியீடு தொடர்பான கடிதங்கள் யாவும் சஞ்சிகையின் பின்புற அட்டையில் குறிப்பிடப்பட்ட ஆசிரியரின் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

## புது அறிவொளி

கல்விப் பொதுத்தராதர உயர்தர (கலை/வர்த்தக) பரீட்சைக்குரிய கல்வி வெளியீடாகவும், கலை இலக்கிய இதழாகவும் "புது அறிவொளி" என்ற பெயரில் கொழும்பு, பிரைட் கல்வி நிறுவனம் சாந்தையூர் சக்திவேல் அவர்களை ஆசிரியராகவும் கொண்டு புதிய சஞ்சிகையொன்றினை வெளியிட்டுள்ளது. இக் காலாண்டிதழின் ஆண்டுச் சந்தா 25/- எனவும் காசுக்கட்டளை The Director Bright Training Centre, Colombo என்ற பெயருக்கு அனுப்பிவைக்க வேண்டும். என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# NOOL THETTAM

## A Quarterly Bibliography

*Editor:*
N. Selvarajah

*Publishers:*
Ayothy Library Services,
Anaicoddai
Jaffna, Sri Lanka.

*Subscription:*
Single Copy Rs. 10/-
Annual Subscription 40/-
(Postage included)

*Correspondence:*
N. Selvarajah
Librarian
Evelyn Rutnam Institute
University Lane, Thirunelveli
Jaffna.